## கல்வி வாசனையற்ற ‘மாக்கள்’!

கல்வி வளர்ச்சிக்குப் பங்காற்றுவதை முக்கியமான அரசியல் கடமையாகக் கருதுவது திராவிட இயக்கம். டாக்டர் நடேசனார் தொடங்கிய திராவிட மாணவர் விடுதி முதல் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்த ‘காலை உணவுத் திட்டம்’ வரை அதற்கான சாட்சியங்கள் ஏராளம்.

சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின் தங்கிய, ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேற கல்வியே மகத்தான ஆயுதம் என்று உணர்ந்ததால், கல்வி கற்கும் மாணவர்களுக்கான பல வாய்ப்புகளை உருவாக்கித் தருவதுடன், தடைகள் வரும்போது துணிச்சலுடனும் எதிர்த்து நிற்கிறது, திராவிட இயக்கம்.

மறுபுறத்தில் இந்துத்துவ பாசிசமோ கல்விக்கான எல்லாத் தடைகளையும் உருவாக்குகிறது. ‘சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே’ என்ற மனு தர்மத்தைப் பல நூற்றாண்டுகளாக நடைமுறைப்படுத்துகிறது. அதன் விளைவுதான் ‘நீட்’ போன்ற அநீதித் திட்டங்கள் மூலம் கல்விக்கு முட்டுக்கட்டை போடுவது. அதே வேளையில், கல்வியை அவமதிக்கும் விதத்தில் பல கருத்துகளைப் பரப்பவும் செய்கிறது.

அப்படித்தான் மத்தியப் பிரதேசம், குணா தொகுதி பா.ஜ.க. எம்.எல்.ஏ. பன்னலால் ஷக்யா, “கல்லூரியில் படித்து வாங்கும் பட்டங்களால் எந்தப் பயனுமில்லை. படிப்பதை விட, பைக் பஞ்சர் பார்க்கும் வேலையைக் கற்றுக்கொள்ள வேண்டும்” என்று பேசியிருக்கிறார். அதுவும் எங்கே ‘பிரதமர் சிறப்புக் கல்லூரி’ (PM COLLEGE OF EXCELLENCE) தொடக்கவிழாவில். ஏற்கெனவே பிரதமர் மோடி “இளைஞர்கள் பக்கோடா போட்டு விற்பதும் வேலைவாய்ப்புதான்” என்று பேசியிருந்தார்.

இப்படிப்பட்ட ஆணவப்பேச்சுகளின் அடித்தளம், ‘ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேறிவிடக்கூடாது’ என்ற ஆழ்மன வக்கிரம்தான்.

## ஃப்ளாஷ்பேக்





டாக்டர் ஆர்.சந்திரமோகன்

### குமரியில் உயர்ந்த கொடிக்கம்பம்!

1974-ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் மாண்புமிகு கலைஞர் தந்த வாய்ப்பினால், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பு மாணவராகச் சேர்ந்தேன். 1975-ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராக இணைந்துகொண்டேன். 1992-ஆம் ஆண்டு இன்றைய முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக, கழக வளர்ச்சிப் பணிகளுக்காக குமரி மாவட்டத்துக்கு வருகை தந்தார். குற்றியாறு, கோதையாறு உள்ளிட்ட மலைக் கிராமங்களில் கொடியேற்றும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அப்போது, டாக்டர் ஆல்பன் அவர்கள் குமரி மாவட்டக் கழகச் செயலாளராக இருந்தார். குமரி மாவட்டத்திலேயே அதிக உயரமான (103 அடி) கொடிக்கம்பம், திருவட்டார் பஸ் நிலைய சந்திப்பில் உள்ளது. தளபதியார் அவர்கள் அந்தக் கம்பத்தில் கொடியேற்றியபோது எடுத்துக் கொண்ட படம் இது.

**– டாக்டர் ஆர்.சந்திரமோகன்,**
**திருவட்டார், குமரி மாவட்டம்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அன்பு அழைப்பு!

1961-ஆம் ஆண்டு, கழகத்திலிருந்து விலகியவர்களுக்கு அழைப்பு விடுக்கும் வகையில், விரிவான ஓர் அறிக்கையை வெளியிட்டார் பேரறிஞர் அண்ணா.

“ஒரு பெரிய அமைப்பிலே ஈடுபடும் போது நமக்கென்று தோன்றும் எண்ணங்கள் சரியானவை - நியாயமானவை - தேவையானவை என்று தோன்றினால், அந்த அமைப்பு அவைகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான முறையில் வாதிட்டு வெற்றி காண்பதுதான் ஜனநாயகக் கடமை” என அவர் வெளியிட்ட அறிக்கை, அவரது அரசியல் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டு.


## சீரணி ⟶ இளைஞர் அணி

20

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

ஓவியம் : ரவி பேலட்





# ‘எல்லை காந்தி’ தொடங்கி வைத்த சீரணிபுரம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 1953- ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் கல்லக்குடிப் போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டம் நடைபெற்ற 16 ஆண்டுகளுக்குப் பிறகு, 1969-ஆம் ஆண்டின் இறுதியில், டால்மியாபுரம் ரயில் நிலையத்தின் பெயரை ‘கல்லக்குடி பழங்காநத்தம்’ என மாற்றுவதற்கான ஒப்புதலை அன்றைய ஒன்றிய அரசு அளித்தது. அதுதொடர்பாக, கலைஞருக்கு அன்றைய ஒன்றிய உள்துறை அமைச்சர் சவான், கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார். அதைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

தம் மண்ணின் மொழி உரிமைக்காகப் பாடுபட்ட நம் தலைவருக்கு எடுக்கப்பட்ட வெற்றிக் கொண்டாட்டங்களின் போதுதான், பாகிஸ்தானில் தமது மக்களின் உரிமைக்காகப் போராடி வந்த ‘எல்லை காந்தி’ என்று போற்றப்படுகிற கான் அப்துல் கபார் கான் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தார்.

**என்னையும் அழைத்து மகிழ்ச்சியுடன் உறவாடி, “இறைவனுக்குப் பிடித்த பணியைச் செய்து வருகிறீர்கள்” என்று புகழ்ந்துரைத்தார்.**

தன்னுடைய பொதுப்பணிகளுக்காக நிதி திரட்டவும், மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் நூற்றாண்டுப் பிறந்தநாள் விழாவையொட்டியும் 1969-ஆம் ஆண்டு டிசம்பர் கடைசி வாரத்தில் இந்தியாவுக்கு வந்திருந்தார் கான். அவரது வருகை தொடர்பாக, கலைஞர் தனது ‘நெஞ்சுக்கு நீதி’ இரண்டாம் பாகத்தில் இவ்வாறு எழுதுகிறார்:

“கல்லக்குடி வெற்றிச் செய்தி கிட்டிய காலகட்டத்திலேதான் எல்லை காந்தி என அழைக்கப்படும் கான் அப்துல் கபார்கான் அவர்கள் தமிழகத்திற்கு வருகை தந்தார்.

அவரது பொதுப்பணிக்காக இந்தியாவில் நிதி திரட்ட வந்த அவரை சென்னை மாநகராட்சி மன்றம் சார்பாக வரவேற்றோம். ஒரு லட்ச ரூபாய் நிதியும் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்தியா, பாகிஸ்தான் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கு முன், எல்லை காந்தி அவர்கள், தமது இயக்கத்தைத் தொண்டர்களின் இயக்கமாக நடத்திக் கொண்டிருந்தார். அவரது இளமைக்கால பொதுப்பணியின் தீவிரத்தைக் கண்ட ஒரு போலீஸ் அதிகாரி, அவரை அடக்கி வைக்குமாறு அவரது தந்தையிடம் கூறி மிரட்டினாராம். உடனே தந்தை, கபார் கானை அழைத்து, “நீ மட்டுந்தானா பொதுத்தொண்டாற்ற வேண்டும்? மற்றவர்களுக்கில்லாத அக்கறை உனக்கு ஏன்?” என்று கடிந்து கொண்டாராம். “அருமைத் தந்தையே! நீங்கள் ஏன் தொழுகை நடத்துகிறீர்கள்? மற்றவர்களுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு அதில் எதற்காக?” என்று கபார்கான் கேட்டாராம். “அது எனது கடமை! விட முடியாத கடமை! முக்கிய கடமை!” என்றாராம் தந்தை. அதைப்போலவே, நானும் பொதுத் தொண்டை, விட முடியாத கடமையாகக் கருதுகிறேன்” என்று விடையளித்தாராம் கபார் கான்! அவர்தான் எளிய வாழ்க்கையின் இனிய வடிவாய்த் திகழும் எல்லை காந்தியானார்.

அண்ணா காலத்தில் தொடங்கப்பட்டிருந்த, சீரணி போன்ற அமைப்புகளையும், கழக ஆட்சியில் ஏழை எளியோருக்காக நடத்தப்பட்ட சாதனைகளையும், எல்லை காந்தி அவர்கள் பாராட்டிப் பேசியதுடன், என்னையும் அழைத்து மகிழ்ச்சியுடன் உறவாடி, “இறைவனுக்குப் பிடித்த பணியைச் செய்து வருகிறீர்கள்” என்று புகழ்ந்துரைத்தார்”.

எல்லை காந்தியின் சென்னை வருகையின் போது, சீரணியினரால் சென்னையில் கட்டப்படவிருந்த ‘சீரணிபுரம் வீடுகள்’ கட்டும் வேலையை அவர் தொடங்கி வைத்ததாக 1969-ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் தேதியிட்ட **‘நம்நாடு’** இதழ் தெரிவிக்கிறது. சைதை தொகுதியில் தொடங்கப்பட்ட அந்த சீரணிபுரத்தில், எளியோர்களுக்காக 170 வீடுகளை சீரணியினர் கட்டி முடித்தனர்.

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

20

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”



# ரொட்டிக்கு உப்புதான் மோடி கல்விக் கொள்கையா?

*முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என்பது, அ.தி.மு.க.வின் திட்டம், அதில் தி.மு.க. தனது லேபிளை ஒட்டிக் கொள்கிறது என்று எடப்பாடி பழனிசாமியும், மோடி அரசின் தேசிய கல்விக் கொள்கை 2020-ஐ எதிர்க்கும் தி.மு.க. அரசு அதில் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டத்தைத்தான் செயல்படுத்தியுள்ளது, என்று அண்ணாமலையும் சொல்கிறார்களே?*

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் காங்கிரஸ் அரசு நடைபெற்றபோது, கலைஞரின் பெயரிலேயே காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கினார், அன்றைய முதலமைச்சர் நாராயணசாமி.

**அதனால்தான் இங்கிலாந்து, கனடா, போன்ற நாடுகளிலும் திராவிட மாடல் அரசின் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.**

அடுத்த நாள் பள்ளிகளுக்கு விடுமுறை தினம். அதன் பிறகு அந்தத் திட்டம் என்னவானது என்றே தெரியவில்லை. காரணம், புதுச்சேரியில் பள்ளிகளில் உணவு வழங்கும் பொறுப்பு, ‘அட்சய பாத்ரா’ என்ற தொண்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்ததுதான். இதில் அரசாங்கத்துக்குப் பொறுப்பில்லை.

அதே ‘அட்சய பாத்ரா’ தான் தமிழ்நாட்டில் அ.தி.மு.க ஆட்சியில் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தியது. எடப்பாடி பழனிசாமி முன்னிலையில், அன்றைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தொடங்கி வைத்து, அட்சய பாத்ரா நிறுவனத்துக்கு தன் சார்பில் நிதியும் அளித்தார். இதில் அரசாங்கத்துக்குப் பொறுப்பு கிடையாது. அட்சய பாத்ராவின் காலை உணவில் பூண்டு, வெங்காயம் போன்றவையும் கிடையாது. இதிலிருந்தே இது யாருக்கான உணவு என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால், தி.மு.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் அரசின் நிதியில் செயல்படுத்தப்படுகிறது. நாள்தோறும் குழந்தைகளுக்குத் தேவையான சத்துடன் கூடிய பொங்கல், உப்புமா, கிச்சடி, சாம்பார் போன்றவை வழங்கப்படுகின்றன.

அண்ணாமலை சொல்கின்ற தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்ட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் எந்த மாநிலத்தில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது? பா.ஜ.க.வின் ‘டபுள் என்ஜின் சர்க்கார்’ எனப்படும் உத்தர பிரதேச மாநிலப் பள்ளிக்கூடங்களில் மதிய உணவாக ரொட்டிக்கு உப்பைத் தொட்டுக்கொள்ளும் பரிதாப நிலையில்தான் குழந்தைகள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் காலையில் ஆரோக்கியமான உணவு, மதியம் முட்டையுடன் சத்துணவு வழங்கப்படுகிறது.


அதனால்தான் இங்கிலாந்து, கனடா, போன்ற நாடுகளிலும் திராவிட மாடல் அரசின் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இங்கிலாந்து தேர்தலில், வெற்றி பெற்றுள்ள தொழிலாளர் கட்சி அளித்த வாக்குறுதிகளில் ஒன்று, நம் திராவிட மாடல் அரசின் காலை உணவுத் திட்டம் என்பதை, ‘அவர்களுக்கு’ யாராவது எடுத்துச் சொல்லட்டும்.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

543

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131